AL12-1-2

# பரலோகத்தை கூறித்த சுவாரஸ்யம் என்ன? பரலோகம் சுவாரஸ்யமான இடமா? –

நிகழ்ச்சி 2

இன்று ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில் பார்க்கப்போவது, பரலோகத்தை குறித்த சுவாரஸ்யங்கள் என்ன? நீங்க ஒருவேளை டிஸ்னிலேன்டிற்கு போக நினைத்தாலோ, ஆல்பனில் ஸ்கையிங் செய்யவோ, ஐரோப்பா போகவோ, திட்டமிட்டால் முதலில் அது எப்படி இருக்கும் என்பது இணையதளத்தின் மூலமாக அறிந்துகொள்ள விரும்புவீர்கள்.

அப்படிபட்ட வழிகாட்டும் புத்தகங்கள் நம்மை அங்கு செல்ல பரவசப்படுத்திடும். பரலோகத்திற்கு செல்லும் வழிகாட்டி நம்முடைய வேதம், அதில் தேவன் நமக்கு வாக்களித்திருக்கும் புதிய வானங்களையும் புதிய பூமியையும் காண காத்திருக்கிறோம் என்றிருக்கிறது.

ஆனால் பரலோகமானது, இந்த வசனம் சொல்கிற “புதிய வானங்கள் மற்றும் புதிய பூமி” ஒருநாள் உங்களுடைய வீடாக இருந்திடும், பரலோகத்தை குறித்து உங்களுக்கு என்ன தெரியும்? ஆங்கு என்ன செய்வீர்கள் என நினைக்கிறீர்கள், எப்படிபட்ட அனுபவம், நித்தியத்தை செலவிடப்போகும் இடம் எப்படிபட்டதாக இருக்கும்?

இன்றைக்கு எனது விருந்தினரான பரலோகம் என்ன புத்தகத்தின் ஆசிரியர், டாக்டர். ரேன்டி அல்கார்ன். நம்முடைய எதிர்கால குடியிருப்பாகிய பரலோகத்தை பற்றி தேவன் கிறிஸ்தவர்களுக்கு வாக்களித்திருக்கிற அருமையான காரியங்களை விளக்கிடுவார். இன்றைய விசேஷ நிகழ்ச்சியில் நீங்களும் இணைந்திடுங்கள் ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சி.

------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நாம் டாக்டர் ரேன்டி அல்கார்னுடன் பேசிக்கொண்டிருக்கிறோம், பரலோகத்தைக் குறித்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். பரலோகத்தில் எப்படிபட்ட வாழ்க்கை இருக்கும்? பரலோகத்திற்கு போகும் போது உங்கள் வயது என்னவாக இருக்கும்? நமக்கென்று ஒரு வீடு இருக்குமா? பரலோகத்தில் நாம் எங்கே தங்கப்போகிறோம்? பரலோகத்தில் நாம் பிரயாணம் செய்திடுவோமா? பரலோகத்தில் நாம் என்ன உடை அணிந்திருப்போம்?

இந்தமாதிரியான கேள்விகளை தான் இன்று நாம் ரேன்டியுடன் பேச இருக்கிறோம் அதற்கான பதில்களை வேதத்திலிருந்து அவர் சொல்லப்போகிறார். சரி, ரேன்டி, கடந்த வாரம் நாம் பார்த்த சில கேள்விகளுடன் ஆரம்பிக்க விரும்புகிறேன், அது என்னன்னா, பல கிறிஸ்தவர்கள் பரலோகத்தை குறித்த பரவசமின்றி இருக்கின்றனர். பரலோகத்தை பற்றிய எந்த சுவாரஸ்யமும் இல்லாமல் பரலோகத்தை பற்றி அவர்கள் என்ன யோசிப்பார்கள்?

டாக்டர். ரேன்டி அல்கார்ன்: வெல், அவர்கள் பெரும்பாலும் அது சோர்வை உண்டாக்கும் நீண்ட சபை ஆராதனைப் போல இருக்கும் என்கின்றனர், எல்லா சபையின் ஆராதனைகளும் சோர்வை உண்டாக்காது, ஆனால், அதாவது, 2000 வருடங்களுக்கு மேலாக ஒரேமாதிரி போயிட்டு இருந்தா சோர்வாக தானே இருக்கும். இதைதான் ஜனங்கள் யோசிக்கிறார்கள்.

ஒரு கார்ட்டுன் படம் எனக்கு நினைவிருக்கிறது அதில் ஒரு சிறுவன் கையில் ஒரு அச்சடிக்கப்பட்ட புத்தகத்தோடு சுற்றிலும் ஒளிவட்டமும் தூதர்களின் இறக்கையோடு மேகத்தில உட்கார்ந்திருப்பான், அவன் பரலோகத்திற்கு செல்வான், இப்ப ஒன்னு செய்யாம சும்மா மேகங்கள் மேல உட்கார்ந்திருப்பான்.

அந்த குறிப்பில் கூறியிருந்தது, “என்னுடைய நாழிதலையாவது கொண்டுவந்திருக்கலாம்” இப்படிதான் பலரும் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள் - ஒரு வேலையும் இருக்காது, யார்கிட்டயும் பேச முடியாது, எங்கும் போக முடியாது.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆமாம், தேவன் இதைப் பற்றி என்ன சொல்லுகிறார் என்று பார்க்கலாம். இதை நான் உங்களுக்காக வாசிக்க விரும்புகிறேன், அதன்பிறகு நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்த காரியத்தை விளக்கி சொல்லுங்க.

வெளிப்படுத்தல் 21:2, பரலோகத்தை பற்றிய சாயலை தேவன் தந்திருக்கிறார். அப்போஸ்தலனாகிய யோவான் இதில் எழுதும் போது சொல்கிறார், “புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன், முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்திலிருந்து தேவனிடத்தினின்று இறங்கி வரக்கண்டேன். துன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன். இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்.

இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். ஆவர்கள் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன்தாமே அவர்களோடு இருந்து அவர்கள் தேவனாயிருப்பார். ஆவர்கள் கண்ணீர் யாவையும் அவர் துடைப்பார்.

இனி மாரணமுமில்லை துக்கமுமில்லை அலறுதலுமில்லை வருத்தமுமில்லை. முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.”

இதைப் பற்றி கடந்த வாரம் பேசும்பொழுது பார்த்தோம், நிகழ்கால பரலோகம் என்றும் எதிர்கால பரலோகம் என்றும் இருக்கிறது. எதிர்கால பரலோகத்தை பற்றி இவை நமக்கு கூறுகின்றன.

நிகழ்கால பரலோகத்தை பற்றிய சிலவற்றையும் இங்கு நம்மால் காணமுடிகிறது. இதன் வித்தியாசத்தை விளக்கிடுங்கள், ஏன்னா ஜனங்கள் கேள்வி, “ஹே.:. கம் ஆன், பரலோகம் மாற்றம் பெறுமா? கம் ஆன்”.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: தேவன் ஒருபோதும் மாறாதவர். ஆவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார். ஆனால் பரலோகம் என்பது குறிப்பிட்ட இடம். தேவன் சர்வ வியாபியாக இருக்கிறார். அதற்கு அர்த்தம் அவர் எங்கும் வாசமாயிருக்கிறார். ஆனால் அவர் தெரிந்துகொள்ளும் விசேஷித்த வாசஸ்தலம் இருக்கிறது, அதுதான் பரலோகம்.

அவருடைய சிங்காசனம் அங்குதான் இருக்கிறது. தேவன் இப்போது இருக்கும் பரலோகத்திலிருந்து தம்முடைய வாசஸ்தலத்தை மாற்றப்போவதாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது, நம்முடைய கவனத்திற்கு அப்பார்பட்ட, நிலையில் புதிய வானங்கள் மற்றும் புதிய பூமிக்குள்ளாக இருக்கும், அது பூமிக்கு தத்ரூபமாக கொண்டுவரப்படும்.

மேலும் எபேசியர் 1ல் வானமும் பூமியும் எப்படி கிறிஸ்துவின் தலைமைக் கீழா ஒன்றாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு, நினைவிருக்கட்டும், கிறிஸ்துவின் பெயர், இம்மானுவேல், அதற்கு அர்த்தம் “தேவன் நம்மோடிருக்கிறார்.”

இந்த தேவன் நித்தியநித்தியமாக நம்மோடு கூட இருக்கப்போகிறார். எனவே புதிய எருசலேமில் தேவனுடைய சிங்காசனத்தை நாம் பார்க்கும்போது, இயேசுவை அந்த சிங்காசனத்தில் வீற்றிருக்கக் காண்போம். பிதாவும் அந்த சிங்காசனத்தில் வீற்றிருப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனுடைய அர்த்தம் தேவன் தம்முடைய வாசஸ்தலத்தை மாற்றியமைக்கிறார் அதாவது புதிய எருசலேமை புதிய பூமியின் தலைநகரமாக்குகிறார், அதுதான் இந்த புதிய உலகின் தலைமையகம், புதுப்படைப்பாகிய, புதுப்பிக்கப்பட்ட அண்டசராசரங்கள்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், ஆரம்பத்திலிருந்து இப்ப பார்க்கலாம். நாம் மரிக்கும் தருணத்தில் என்ன நடக்கிறது?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: நாம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களாக இருப்போமானால், மரித்தவுடன் நாம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் கடந்துசெல்வோம். ஐசுவரியவான் லாசருவின் சம்பவத்தில் நாம் பார்க்கிறோம் ஐசுவரியவான் தேவனை அறியாதவனாக

இருந்தான், அவன் மரித்தவுடன் எந்த இடத்திற்கு சென்றானென்றால், அது வேறு இடம், அதைதான் நிகழ்கால நரகம் என்று சொல்கிறோம்.

ஆனால் நிகழ்கால நரகமானது அக்கினி கடலில் தள்ளப்படும். அதைப்போலவே, நிகழ்கால பரலோகமானது அதாவது, லாசரு மரித்தபோது சென்ற இடம் அது, அந்த இடம் புதிய பூமிக்கு இடமாற்றம் அடைந்திடும்.

ஆனால் நாம் மரித்தவுடன் தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசித்திடுவோம். பவுல் இதை மிகவும் சிறப்பாக கூறுகிறார், "இந்த தேகத்தைவிட்டு பிரிந்து குடிபோவது கர்த்தரிடத்தில் குடியிருப்பதற்காக என்கிறார்." இவையனைத்தும் சுயநினைவில் ஓடிக்கொண்டேயிருக்கும். எனக்கு ஒரு குடும்பத்தை தெரியும் அவங்க மக ஒரு அறிதான வியாதியில் மரித்துக்கொண்டிருந்தா, அவளோட பேர் எமிலி.

அவள இதை புரிந்துகொள்ள வைப்பதற்காக, அவங்க அவளிடம், "ஓகே, எமிலி, நாங்க என்ன செய்ய போறோன்னு சொன்னா, உன்னை இப்ப நாங்க, வீல்சேர்ல கூட்டிட்டு போய், நீ இருக்கப்போற இந்த அறையில உன்ன விடப்போறோம், நாங்க கதவுக்கு அந்தப்பக்கமாக தான் இருப்போன்னு அவகிட்ட சொன்னாங்க."

அதன்பிறகு அவர்க்ள ஒவ்டிவாருவராக அந்த அறைக்குள் போனாங்க. அவர்கள் அவளிடம், "நீ தா நம் குடும்பத்திலேயே தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கும் முதல் நபராக இருக்க. ஆனா பின்னாலையே, ஒவ்வொருத்தரா, நாங்களும் நீ இருக்கும் இடத்திற்கு வந்திடுவோம் என்றனர்."

மேலும், உண்மையில, இந்த உதாரணத்தை பூரணப்படுத்தறதுக்கு, அவனோடு கூட இந்த அறையில் இயேசு இருக்கவேண்டும் என்பது தான் அதிக முக்கியம், அப்படிதானே. ஆதனால அவ அந்த அறையில் தனித்து விடப்படவில்லை. அவள் தேவனோடு கூட இருப்பாள், அதன்பிறகு அவள் குடும்பத்தில் இயேசுவை நேசிப்பவர்களும் இணைந்திடுவர்.

அது ஒரு அருமையான உதாரணம் என நினைத்தேன், ஏன்னா மரணத்தினால் தற்காலிக பிரிவு ஏற்படுவதையும் அதன் பிறகு, தேவனை நேசிப்பவர்களோடு மீண்டும், இணைந்திடுவோம் என்பதையும் நினைப்பூட்டுகிறது.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: தேவன் நமக்கு கொடுக்கப்போகிற புதிய சரீரத்தைக் குறித்து பார்க்கலாம், ஆல்ரைட். பவுல் கூறுகிறார், 1 கொரிந்தியர் 15:

சரீரம் அழிவுள்ளதாய் விதைக்கப்படும்" – மரித்துப்போகும் சரீரம், அழிவுள்ளதாயிருக்கிறது – "அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும்" – யாராவது மரிப்பதை நேரில் பார்ப்பதென்பது, அருமையானதாக இருந்திடாது – "மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்." பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும்" – நாம் அதை உணர்ந்துகொண்டே இருக்கிறோம் வயதாகும்போது நாம் பலவீனமடைகிறோம். மரணத்திற்கேதுவான நாட்களில், உங்களால் எந்த வேலையும் செய்ய முடியாது. மூச்சுவிடுவதும் சற்று கடினமாக இருக்கும் - "ஆனால் பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.

ஜென்ம சரீரம் விதைக்கப்படும், "பவுல் கூறுகிறார், "ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். ஜென்மசரீரமும் உண்டு ஆவிக்குரிய சரீரமும் உண்டு." நமக்கு மாதிரியாக அவர் இயேசுவின் உயிர்த்தெழுந்த சரீரத்தை குறிப்பிடுகிறார். இந்த புதிய சரீரம் எப்படியிருக்கும் என்பதை விளக்கி சொல்லுங்கள்.

டாக்டர். ரனேட்டி அல்காரன்: வெல், நாம் இயேசுவின் சரீரத்தை பார்க்கலாம் ஏன்னா அவர்தான் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பலனானவர். நாம் அவரைக் காணும்போது அவர் இருக்கிற வண்ணமாகமே நாமும் இருப்போம் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான அர்த்தம் என்னவென்று நாம் இயேசுவின் உயிர்த்தெழுந்த சரீரத்தை பார்த்து புரிந்துகொள்ள முடியும், உயிர்த்தெழ இருக்கும் நமது சரீரத்தை பற்றி அறிந்திடலாம்.

அவர் தம்முடைய சீஷர்களிடம் சொல்லும் போது இப்படி சொன்னார், "தொட்டுப்பாருங்கள். எனக்கு மாம்ச சரீரம் இருக்கிறது. நான் ஆவி அல்ல. நீங்கள் காண்கிறபடி மாம்சமும் இரத்தமும் ஆவிக்கு இராது என்றார்."

இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்ன? சரி, உயிர்த்தெழுந்த சரீரத்திற்கு மாம்சமும் இரத்தமும் இருக்கும். அந்த, சரீரம் பாவத்திற்கு மரணத்திற்கும் பாடுகளுக்கும் சாபத்தினால் உண்டாகும் எந்த காரியத்திற்கு கீழ்ப்பட்டது அல்ல.

வெளிப்படுத்தல் 22ல் கூறப்பட்டுள்ளது இனி ஒரு சாபமும் இராது. இயேசு மரணத்தை ஜெயித்தார். சாபத்தை அவர் ஜெயித்தார். சாபத்தை அவர் மாற்றிவிட்டார்.

நம்முடைய உயிர்த்தெழுந்த சரீரத்தில் நாம் இதுவரை இல்லாத வாழ்வை அனுபவிக்கிறவர்களாக இருப்போம். ஏனென்றால் உயிர்த்தெழுந்த வாழ்க்கை எப்படியிருக்கும் என்று தெரியுமே. நம்முடைய அந்த வெற்றியின் நாளில் நீங்கள் சிறப்பாக இருப்பதை உணர்வீர்கள் சிறப்பாக காட்சியளிப்பீர்கள் புதிய தெம்பு உண்டாகும் அப்போது வாழ்வின் உச்சத்தில் நிற்பது போல நினைத்திடுவீர்கள்.

பொதுவாக நாம் கடந்து வந்த பாதையை திரும்பி பார்க்கும் பழக்கமுடையவர்கள். சரி, இப்ப யோசிங்க? உயிர்த்தெழுதலில், நம்முடைய இலக்கு முன்பாகதான் இருக்கும், நாம் ஒருபோது அதை கடந்துபோக மாட்டோம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: இயேசுவைப் போல இயற்கைக்கு அப்பார்பட்ட தன்மைகள் நமக்கு இருக்குமா? அதாவது, இயேசு நேராக வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இந்த, புதிய சரீரம் எவ்வளவு தூரம் பிரயாணிக்கும்?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: அதைப் பற்றி நமக்கு உறுதியாக தெரியாது. ஒருவேளை இயேசு தனித்தன்மை உடைய தேவ மனிதனமாக, இருந்ததினால் அப்படி செய்தாரா? ஆனா ஒன்று தெரியும் இந்த சரீரம் கூடுமான அளவு திறனுள்ளதாயிருக்கும், இதுவரை இல்லாத அளவிற்கு சிறப்பானதாகவும் இருந்திடும்.

அங்கே வியாதி இருக்காது. நமக்கு தெரிந்து, அடுத்த காரியம், புதிய எருசலேமில் வீதிகள் இருக்கும். நகரத்திற்கு போவதற்கு வாசல்களும் இருக்கும்.

சரி, பொதுவாக வீதிகள் என்றால் அது நடக்க முடியும் வாசல் என்றால் நுழைந்துபோகலாம் என்று அர்த்தமாகும். ஆதனால எல்லாரும் பறந்துட்டே இருப்போம் என்று சொல்ல முடியாது. சாலைகள் -- வண்டிகள் கூட இருக்க வாய்ப்புண்டு, குதிரைகள் இருக்கும் சுமை சுமக்கும் வண்டியிருக்கலாம். எல்லாவிதமான காரியங்களும் அங்கிருக்கும்.

அங்கு எந்தவித தொழில்நுட்பமும் இருக்காது என்று சொல்லவதற்கு எந்த ஆதாரங்களும் கிடையாது. ஆனால் நம்முடைய சரீரம் இப்போது எப்படியிருக்கிறதோ அப்போதும் அப்படியேதான் இருக்கும், ஆனால் சாபம் இருக்காது, உலகில் பாவம் இல்லாதிருக்கும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நாம் தூதர்களாக இருக்க மாட்டோம், அப்படிதானே?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: இல்ல. அநேகருக்கு இந்த தவறாக கருத்து இருக்கிறது. நீங்கள் மரித்தவுடன் ஒரு தூதனாக மாறிடுவீர்கள், என் சிநேகிதர் அல்லது என் தாயார் அல்லது என் பிள்ளை மரித்துவிட்டார்கள் இப்போது அவர்கள் எனது காவல் தூதனாக என்னை பாதுகாக்கின்றனர் என்பார்கள். இல்லை, மனிதராயிருப்பவர்கள் எப்போதும் மனிதர்கள் தான், தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். தூதர்கள் தூதர்கள் தான். இவை இரண்டும் முற்றிலும் வேறுபாடுள்ளவை.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்ளலாம். நாம் திரும்ப வந்ததும் நீங்கள் கேட்கும்படியாக விரும்பும் கேள்விகளை நாம் தொடர்ந்து அவரிடம் கேட்க இருக்கிறோம். நான் பரலோகத்திற்கு செல்லும்போது என்னுடைய வயது என்னவாக இருக்கும்? இப்ப உங்களுக்கு 95ன்னா, நீங்க 33 வயதுள்ளவராக இருப்பீங்களா? 10 வயதுள்ளவராக இருப்பீங்களா? உங்க வயசு என்னவாக இருக்கும்? உங்க வயசு என்னவாக இருக்க விரும்புறீங்க? உங்க பிள்ளைக்கு 4 வயசாயிருந்தா, அவ எப்படியிருப்பா? அவனுக்கு என்ன வயசா

---------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், நாங்க வந்துவிட்டோம். நாம் தற்போது பரலோகத்தை குறித்து பேசுவதில் பிரதிபெற்ற, டாக்டர். ரேன்டி அல்கார்னுடன், பேசிக்கொண்டிருக்கிறோம் அவரிடம் சில கேள்வி கேட்க இருக்கிறோம்: ரேன்டி, நாம் பரலோகத்திற்கு போகும் போது நம்முடைய வயசு என்னவாக இருக்கும், ஐந்து வயது பிள்ளை மரித்தாலோ, 92 வயதானவர் மரித்தாலோ, பரலோகத்திற்கு போகும் போது அவர்கள் வயது என்னவாயிருக்கும்?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: வெல், ஆதாம் ஏவாளை கவனிக்கும்போது, அவர்கள் வயதை நாம் பார்க்க முடியும். உண்மையில், அவர்கள் சிருஷ்டிக்கட்ட சமயத்தில், அவர்கள் ஒரு குறிப்பிட்ட வயதுடையவராக இருந்தனர். அவர்களுக்கு என்ன வயது? நம்மால் தீர்க்கமாக சொல்ல முடியாது, ஆனால் அவர்களுடைய வளர்ச்சியடைந்த நிலை என்று நம்மால் யூகிக்க முடியும், அவர்கள் முதிர்ச்சியடைந்த நிலையிலிருந்தனர். ஆனால் உயிர்த்தெழுதலில் நாம் எப்படி இருப்போம்?

சரி, இந்த நடுத்திர காலத்தில் பலவிதமான கருத்துக்கள் சிதறப்பட்டிருப்பது உண்மை. பீட்டர் லாம்பார்ட், செயின்ட் தாமஸ் அகூனாஸ், மத்திய காலத்திலிருந்த துள்ளியமான இறையியல் நிபுனர், இதைக் குறித்து ஆழ்ந்து யோசித்து அதிகமாக எழுதியிருக்கிறார்.

மேலும் தாமஸ் அக்கூனாஸ் சொல்லுகிறார் நாம் அனைவரும் 33 வயதுடையவர்களாக இருப்போமாம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரித்தபோது அவருடைய வயது இதுதான். சரி, இதுவும் ஒரு, நல்ல கருத்துதான், ஆனால் அதை உறுதிபடுத்திட எந்த ஆதாரமும் இல்லை. ஆனால் பொதுவாக தோன்றும் கருத்து என்னன்னா நமக்கு 20 வயதாக இருக்கும், அல்லது நாம் வளர்ச்சியின் உச்சமான நிலையில் இருந்திடுவோம்.

சரி, ஒருசிலருடைய கருத்தைப் போல, அதாவது, வயதுசென்றவர்களாக மரிப்பவர்கள், அவர்கள், உயிர்த்தெழும்போது அதே வயதான தோன்றத்தோடு சரீரத்தோடு எழும்புவதில்லை, ஏனெனில் வயதினுடைய தாக்கம் இருக்குமானால் நாம் சாபத்திற்கு கீழாக இருப்பதை குறிக்கிறது, அங்கே ஒரு சாபமும் இராதே.

எனவே அப்படி நடக்காது என்று நமக்கு நிச்சயமாக தெரியும். சிறு பிள்ளைகளுடைய விஷயத்தில், ஒரு குழந்தை 4 வயதில் மரித்தால், பல பெற்றோர் நினைப்பார்கள், சரி இவங்க, வயது அதிகரித்து அவர்கள் வளர்ச்சியின் உச்ச நிலையை அடைவார்களா மற்றவர்களைப் போலவே இவர்களும் இருப்பார்களோ?

என்னுடைய கருத்து என்னன்னா ஒருவேளை இப்படியும் இருக்கலாம் புதிய பூமியில், உயிர்த்தெழுந்த நிலையிலான, இந்த புதிய பூமியில், 4 வயதில் மரித்த அந்த பிள்ளையை தேவன் 4 வயதுடையதாகவே உயிர்க்க சாத்தியம் இருக்கிறது, அதிலிருந்து அவர்கள் வளர்ச்சியடைந்திடுவார்கள். அது உண்மையெனில், ஒருவேளை ஆயரவருட அரசாட்சியிலோ அல்லது புதிய பூமியிலோ சம்பவிக்கலாம், அப்படியால், தங்கள் பிள்ளைகள் இழந்துபோன அவர்களுடைய வாலிப நாட்களை திரும்ப பெற வாய்ப்பிருக்கிறது என்பதை அறிந்துகொள்வதில் அவர்கள் பெற்றோர் எப்படிபட்ட நம்பிக்கையை அடைய வாய்ப்புண்டாகிறது.

புதிய பூமியில் அவர்கள் பிள்ளைகள் வளர்வதைப் பார்க்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்கலாம். அப்படியானால், அவர்கள் பாக்கியமாக நினைப்பார்கள், ஏனென்றால் அவர்கள் தங்கள் பிள்ளைக்கு என்ன நடக்கமோ என்ற எந்தவொரு வருத்தமுமின்றி பிள்ளையின் வளர்ச்சியை கண்டு சந்தோஷிப்பார்கள்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆமா, வயதானவர்களில் எத்தனைபேர் உங்க கிட்ட இப்படி சொல்லியிருக்காங்க, "அதாவது, எனக்கு வயசாயிடுச்சு, ஆனா அப்பயொன்னு எனக்கு தெரியல?" இந்த காரியத்தைப் பற்றி தேவன் என்ன நினைக்கிறார் என்ற கருத்தை புரிந்துகொள்ளலாம், வாலிப தன்மையும் வீரமும் இருப்பதுபோன்ற உணர்வு, ஆனால் அதற்கான பெலனில்லாமல் இருப்பாங்க.

ஆனா அவங்களுக்கு பெலனிருந்தா எப்படியிருக்கும்? ஆந்த விருப்பம் அவங்ககிட்ட இருக்கு. தேவன் அவர்களுக்கு அதை அருளிடுவார். இந்த சரீரத்தை கொண்டு தேவன் நாம் நினைப்பதற்கு சிந்திப்பதற்கும் மேலான காரியங்களை செய்யப்போகிறார் என்பதைக் குறித்து பார்க்கலாம். எவ்வளவு பெலனுள்ளதுன்னு சொல்லுங்க. ஆதாம் ஏவாளோட அதை ஒப்பிட்டடு சொல்ல முடியுமா. ஒரு அருமையாக அதிகாரம் இருக்கிறது, இப்ப ஆதாம் ஏவாள பார்த்தா, அவங்கள இப்ப உள்ள மனிதர்களோடு ஒப்பிட்டு பார்க்கும் போது, உண்மையில் நமக்கு வியப்பா இருக்குன்னு நினைக்கிறேன். நீங்க இதைப்பற்றி என்ன சொல்றீங்க?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: வெல், நாம் எவ்வளவாய் சீர்குழைந்திருக்கிறோம் என்று நாம் சிந்திப்பதே கிடையாது. ஒருவேளை நாம் ஆதாம் ஏவாளை பரதீசியில், தோட்டத்தில் பார்த்தா, அவங்க அழகப்பார்த்து ஸ்தம்பித்திடுவோம், அவங்களோட பெலன், அவங்க திறமை. ஏன்னா ஆதியாகமம் 3ல என்ன நடந்ததுன்னா, பாவம் உலகில் உட்பிரவேசித்தது. உடனே நம்மீது சாபம் வந்தது. "அதை புசிக்கும் நாளில் நீங்கள் சாகவே சாவீர்கள்." ஆனா நமக்கு தெரியும், அவங்க அப்ப சாகல. அதாவது, அவங்க அதன்பிறகு 900 ஆண்டுகளுக்கு மேல் இருந்தார்கள்.

ரைட், அதன் பிறகு வாழ்நாட்கள் குறைய ஆரம்பித்தது. அதன்பிறகு சாபமும் அதின் தாக்கமும் அதின் விளைவுகளும் அதிகமதிகமாக பெருக பாதிப்பும் அதிகரித்தது. அவர்கள் எப்படி இருந்திருப்பார்கள் என்று கற்பனை செய்தால் -- மனிதர்கள் சிறந்த நிலையில், தேவன் நிர்ணயித்த விதத்தில் இருந்தனர் -- உயிர்தெழும்போது எப்படியிருப்போம் என்பதை அது வெளிப்படுத்தும்.

உயிர்த்தெழுதலில் அதற்கும், மேலாக இருக்கும், ஏன்னா நாம் நினைவில் கொள்ளவேண்டியது, தேவன் ஏதேன் தோட்டத்தையும் உண்மையான சரீரத்தை மட்டும் உயிர்ப்பிக்காமல், அதை சிறப்பானதாகவும் மாற்றி அமைத்திடுவார்.

இந்த நிலையில் தான் கிறிஷ்து சிலுவையில் நிகழ்த்திய நிவாரண வேலையின் செயல்பாடுகள் வெளிபடும், ஏன்னா மனிதர்களாகிய நமக்கும் மட்டும் உரியதாயிராமல், வீழ்ச்சியில் தள்ளப்பட்ட சகல சிருஷ்டிக்கும் உரியதாகும், அவையனைத்தும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்படும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆமா, நிச்சயமா, அதாவது, ஐன்ஸ்டீனுடைய ஐகியூ அளவு 160 என்பார்கள். தேவன் நம்முடைய ஐக்யூவ 1000 மாற்றினாலும் ஆச்சரியமில்லை, ஆல்ரைட், இப்ப நமக்கு ஓரளவுக்கு புரிகிறது. நம்முடைய சரீர திறன்களுக்கும் இவை பொருந்தும், அதாவது முகர்தல் பார்வை மற்றும் உணர்ச்சிகள் போன்றவை.

தேவன் பலவிதமான பரிமாணங்களையும் பலவித நிறங்களில் பலவிதமான காரியங்களை வைத்திருக்கிறார் என்று சொல்லப்படுகிற காரியங்களை இப்போதைக்கு நாம் பார்க்க முடியாது ஏனெனில் எல்லாவற்றையும் ஏற்றும் பக்குவம் இப்போதைக்கு கிடையாது.

இந்த புதிய சரீரத்தில் தேவன் அவற்றை நமக்கு வெளிப்படுத்தினால், நம்முடைய கற்பனைகளுக்கு அப்பார்பட்டதாக இருக்கிறது என்பதை நாம் விளங்கிக்கொள்வோம். அவற்றின் சாயலை தேவன் நமக்கு வெளிப்படுத்துகிறார். பரலோகத்திற்கு செல்லும் போது நாம் எங்கு தங்குவோம் என்பதைக் குறித்து பார்க்கலாம். எப்படி வீடு நமக்காக இருக்கிறது? நாம் எங்கே தங்கப்போகிறோம்? அந்த வீட்டில் நாம் சௌகரியமாக இருக்க முடியுமா?

இயேசு யோவான் 14ல் சொல்கிறார், “ என் பிதாவின் வீட்லெ அநேக வாசஸ்தலங்கள் இருக்கிறது” – கிங்ஜேம்ஸ் கூறுகிறது “குடியிருப்புகள்” “ ஒரு ஸ்தலத்தை உங்களுக்கு ஆயத்தம்பண்ணப்போகிறேன்,

நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்.

ஜனங்கள் கேட்கிற விஷயம், இந்த வாசஸ்தலம் எப்படிபட்டது? எப்படிபட்ட வீடு நமக்கு இருக்கப்போகிறது? பரலோகத்தில் கூட்டநெரிசல் இருக்குமா? இநத கேள்விகளுக்கு பதில்சொல்லுங்க.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: சரி, முதல்ல அது நாம் தங்கும் இடமென்று நமக்கு தெரியும். இந்த வார்த்தைகள், “இடம்” அல்லது வாசஸ்தலம் என்பது டோபாஸ் என்று டாபோகிராபியிலிருந்து உருவானது. ஒரு இடத்தைக் குறிக்கிறது. நினைவிருக்கட்டும், நமக்கு உயிர்த்தெழுந்த சரீரங்கள் இருக்கும். எனவே தங்குவதற்கு இடம் தேவை.

பரலோகத்தை பற்றிய முக்கிய விஷயம் என்னவென்றால், நிச்சயம், இயேசுவும் நம்மோடு அங்கு இருப்பார்.

ஆனால் சில மொழிப்பெயர்ப்புகள் யோவான் 14ஐ பற்றி சொல்லும்போது பெரிய எஸ்டேட் இருக்கும் அதில் பல அறைகள் இருக்கும் என்று கூறுகிறது. வேறு சிலர் பெரிய எஸ்டேட்டில் தனி தனி வீடுகளாக இருக்கும் என்று கூறுகின்றனர். இரண்டு விதத்திலும் இருக்கலாம்.

ஆனால் லூக்கா 16ல் தேவனுக்கே உரிய சம்பத்துகளை நாம் இந்த உலகில் மற்றவர்களுக்கு கொடுத்து உதவும்படியாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் நாம் இராஜ்யத்தின் நித்திய வீடுகளில், பரலோகத்தில், வீடுகளில் ஏற்றுக்கொள்ளப்படுவோம் என்கிறது. அதனால் தனித்தனி வீடுகள் இருக்கும் என்பதை குறிப்பதோடு புதிய பூமிக்கு வரவழைக்கப்படும்போது நீங்கள் வசிப்பதற்கு வீடுகள் இருக்கும் என்கிறது.

சோ, இது அருமையான சிந்தனை. எனவே இதில் முக்கியமான விஷயம் நாம் இயேசுவோடு இருப்பதுதான், நம்மோடு மற்றவர்களும் இருப்பார்கள், நமக்கென்று சொந்தமாக இடமும் நமக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: எப்படிபட்ட உடைகளை அணிந்திருப்போம்? என்ன உடை அணிந்திடுவோம்?

டாக்டர். ரனேட்டி அல்காரன்: சரி, நமக்கு தெரிந்திருப்பதுபோல இரத்தசாட்சியாக மரித்து பரலோகம் சென்றவர்களும், மற்றவர்களும் அங்கிகள் தரித்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் அநேகருடைய கருத்து, நாம், அனைவரும் பரலோகத்தில் அங்கிகள் அணிந்திருப்போம் என்பதுதான். ஆனால் அங்கிகள் அந்த காலத்தில் அன்றாட உடையாக தான் இருந்தது.

அதனால் நான் நினைக்கிறேன், ஒருவேளை இப்பவும் இருக்கலாம், அதாவது, நாம் சராசரி உடைகளையே அணிந்திடுவோம். எனவே புதிய பூமியில் வாழும் போது பழைய பூமியில் மக்கள் தங்கள் கலாச்சாரப்படி உடுத்தியிருந்ததை போலவே இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நமக்கு உணர்வுகள் இருக்குமா? கொண்டாட்டங்கள் இருக்குமா? குடும்ப கூடுகைகள் இருக்க வாய்ப்பிருக்கிறதா?

டாக்டர். ரனேட்டி அல்காரன்: வெல், நாம் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். அதனால், அதனுடைய விளைவாக, நமக்கு உணர்ச்சிகள் இருக்கு, உணர்வுகள் இருக்கு. மற்றவர்களுக்காக பரிதபிப்போம். மற்றவர்களோடு இருக்க விரும்புவோம். கொண்டாட்டங்கள் பிடிக்கும்.

சரி, அதாவது, அநேக ஜனங்கள், இந்த உலகில் கொண்டாட்டம் என்ற பெயரில் தவறாக நடக்கிறார்கள், மேலும், உண்மையில், வேதாகம காலத்தில், கொண்டாட்டம் என்றால் எல்லாரும் ஒன்றுகூடி சந்தோஷத்தை பகிர்ந்திடுவர். பண்டிகைகளை யோசித்துப் பாருங்கள். இஸ்ரவேல் மக்களுடைய ஆனந்தமான ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் ஒன்றுகூடி சந்தோஷமா புசித்தார்கள் என்று வரலாறு கூறுகிறது.

அவர்களுடைய சாப்பாட்டு நேரம் அதிகரித்துக்கொண்டே இருக்கும். அதாவது மேஜையின் மீது உட்காரும்போது – நாம் தேவ இராஜ்யத்தில் மேஜையில் உட்கார்ந்து, சேர்ந்து போஜனம்பண்ணும்போது நினைவிற்கு வரும் கதைகளை பரிமாறிக்கொள்வோம்.

இன்றைக்கு நிகழும் சம்பவங்களை நம்மால் நினைவுபடுத்திட முடியும்: இன்றைக்கு நட்சத்திரங்களை பார்த்துட்டு இருந்தப்ப நினைத்தவை, மலையின் மீது நடந்திட்டிருக்கும்போது யோசித்தவை, இயேசுவுக்காக ஆயத்தம்பண்ணும்போது யோசனை வந்தது.இன்றைய வேலைகளில் நான் கற்றுக்கொண்டவைகள்.'' மற்றவர்களுடைய கதைகளை நாம் கேட்டிடுவோம். இப்போது நமக்கு எதுவும் புரியலைன்னாலும் அன்றைக்கு இப்போது நாம் கடந்துசெல்லும் பாதைகளை நினைத்து தேவனுடைய வழிநடத்துதல்களை காணும் கண்ணோட்டத்தை விளங்கிக்கொள்ளோம் என நினைக்கிறேன்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: எப்படி ஒரு நபர் தான் பரலோகத்திற்கு செல்லும் நிச்சயத்தை உறுபடுத்திட முடியும்?

டாக்டர். ரனேட்டி அல்காரன்: 1 யோவான் 5ல் சொல்லப்பட்டிருக்கிறது, ''உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியும்படிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்.'' யாருக்கு எழுதுகிறார்? தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருப்பவர்களுக்கு.'' இயேசு கிறிஸ்துவோடுள்ள நமது உறவும் அவர் மீது நாம் வைத்திருக்கும் விசுவாசமும் அந்த நிச்சயத்தை பெறச் செய்யும்.

நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாறுவது அப்படிதான். முனந்திரும்பும்படி முழங்காலை முடக்கி, இயேசுவிடம் வாழ்வை ஒப்புவித்து, மன்னிக்கும்படியாக கேளுங்க. ஏனென்றால் பரலோகம்தான் என் முடிவு என்னிறிட முடியாது, நகரமும் உண்மைதான். ஏனெனில் நாம் பாவத்திற்கு கீழிருக்கிறோம்.

ஆனால் இயேசு நம்முடைய பாவங்களை சிலுவையில் சுமந்துவிட்டார் அதனால் அவரை விசுவாசித்து, அவருடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுவதை ஏற்றுக்கொண்டு, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாக நின்று பரலோகத்திற்குள் பிரவேசித்து அவரோடு நித்தியமாக வாழ்ந்திடலாம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், பிரியமானவர்களே, அடுத்த வார நிகழ்ச்சியை விட வேண்டாம். நாம் அடுத்த வாரம், பரலோகத்தில் மிருகங்கள் உண்டா என பார்க்கலாம். பரலோகத்தில் செல்லப்பிராணிகளோடு இருப்பீர்களா? பரலோகத்தில் புசித்து குடித்து இருப்போமா? பரலோகத்தில் நாம் தூங்க முடியுமா? எப்படிபட்ட உறவுகள் நமக்கு இருக்கப் போகிறது?

பரலோகத்தில் திருமணம் நடக்குமா? அடுத்த வாரம் இன்னும் பல கேள்விகளோடு வருவோம். நீங்கள் இதை தவறவிடாதிருங்கள்.

எங்களுடைய மற்ற டிவி நிகழ்சிகளை பார்க்க எங்களுடைய ஜான் அன்கேர்பெர்க் ஷோ ஆப்பை இலவசமாக பதிவிறக்கம் செய்திடுங்கள்.

“இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கான ஜெபம்” JA show.org